# டிசம்பர் – 20 – புதன்

## புனித பீற்றர் யூலியன்

## ஆண்டவரது மலையில் ஏறத் தகுதியுள்ளவர் யார்?

## திபா. 24:3

**முதல் வாசகம் : ஏசாயா 7 : 10 – 14**

ஆண்டவர் ஆகாசுக்கு மீண்டும் தம் திருவாக்கை அருளிச் சொல்லியது. "உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும் அது கீழே பாதாளத்திலோ, மேலே வானத்திலோ தோன்றுமாறு கேட்டுக்கொள்ளும்" என்றார். அதற்கு ஆகாசு, "நான் கேட்கமாட்டேன். ஆண்டவரைச் சோதிக்க மாட்டேன்" என்றார். அதற்கு எசாயா "தாவீதின் குடும்பத்தாரே! நான்சொல்வதைக் கேளுங்கள் மனிதரின் பொறுமையைச் சோதித்து மனம் சலிப்படையச் செய்தது போதாதோ? என் கடவுளின் பொறுமையைக்கூட சோதிக்கப் பார்க்கிறீர்களோ?. ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் "இம்மானுவேல்" என்று பெயரிடுவார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எழுந்தருள்வார் மாட்சி மிகு மன்னர் அவரே

**நற்செய்தி : லூக்கா 1 : 26 – 38**

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** தகுதியுடைய மரியாவை அழைக்க இறைவன் திருவுளம் கொண்டார். திட்டமிட்டபடி அவரை அழைத்தார். காலம் நிறைவேறிய போது கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறக்கச் செய்ய ஆறாம்மாத த்திலே கபிரியேல் என்னும் வானதூதரைக் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த கன்னிகையிடம் அனுப்பினார். அவள் பெயர் மரியா. அவளது இல்லம் சென்று "அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே" என்றார். அஞ்சாதீர் கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர் . அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். (லூக் 1:26-32) இவ்வாறு முழு விவரத்தையும் சொல்லி தம் பணிக்கு அழைப்பித்த அவரை இறைவன் தமக்கு ஏற்புடையவராக்கினார். மிகுந்த வலிமையுடன் அரும் பெரும் செயல்கள் பல புரிந்துள்ளார் இதனால் எல்லோரும் பேருடையாள் என்று போற்றும் அளவுக்கு உயர்வு பெற்று இறை மாட்ச்சிமையில் பங்கு பெறச் செய்தார். எனவே அன்னையின் அன்பிலும் இரக்கத்திலும் வேண்டுதலிலும் நம்பிக்கை கொண்டு " அருள் நிறைந்தவரே" என்றழைத்துக் கொண்டு அவரை அணுகி செல்வோமெனில் அவர் நம்மை இரக்கத்தின் இருப்பிடத்திற்கு அழைத்து செல்வார். தக்க வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், இரக்கத்தைப்பெறவும் இறை அருளின் அரியணையை அணுகிச்செல்லவும்," அவர் நம்மை எல்லா நன்மைகளாலும் நிரப்ப வல்லவர். எந்த சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் போதுமான அளவில் நம்மிடம் இருக்கச் செய்வார். அத்தோடு எந்நற் செயலையும் செய்வதற்கு தேவையான பொருள் நம்மிடம் மிகுதியாகவே இருக்கச் செய்வார். (2கொரி9:8)